1973 டிசம்பர் 3]

* 580 வினு—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் வட்டம், பெரியபாளேயம் பொதுப்பணித் துறை பயணியர் மாளிகையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பெரியபாளேயத்திலுள்ள பயணியர் விடுதியை விரிவுப்படுத்தும் செயற்குறிப்பு தற்பொழுது அரசிடம் இல்லே.

திரு. கா. வேழவேந்தன் : இந்தப் பெரியபாளேயத்தில் பெரிய அளவுக்குத் திருவிழாக்களும், முக்கியமான நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்ற நிலைமை இருப்பதினுல், அதிகாரிகளும், பயணியர்களும் அதிகமாக அங்கே செல்லுகிறுர்கள். ஆகவே, மறுபரிசீலனே செய்து, ஒரு 'சூட்' இருக்கிற பயணியர் விடுதியிலே இரண்டு 'சூட்' டுகளே உருவாக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இந்தக் கிராமத்திற்கு மிக அருகாமையில் திருவள்ளூர், கும்முடிப்பூண்டி ஆகிய இடங்கள் இருக்கின்றன. அங்கெல்லாம் பயணியர் விடுதிகள் இருக்கின்ற காரணத்திஞல், அதை விரிவுபடுத்தும் யோசனே இல்லே.

### வைகை அணேப்பகுதி ஊழியர்கள்

* 581 வினு—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பொதுப் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வைகை அணேப் பகுதியில் கார்டனில் வேலே செய்பவர்கள் 10 ஆண்டு காலமாக நிரந்தர ஊழியர்களாக இல்லாமல் இருக்கிறுர்களா ?

(இ) ஆம் எனில், அவர்களே நிரந்தர ஊழியர்களாக ஆக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) ஆம். வைகை அணேப் பகுதியில் வேலே செய்யும் ஊழியர்களே நிரந்தரப்பள்ளி உரிமை பெறும் ஊழியர்களாக ஆக்குவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனேயில் தற்போது உள்ளது.

[1973 டிசம்பர் 3

**திரு. நா. வெ. குருசாமி :** நிரந்தர ஊழியர்களாக ஆக்குவதற்கு செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசிலனேயில் உள்ளது என்று அமைச்சர் அவர்கள் கூறினர்கள். 10 ஆண்டுகளாக வேலே பார்த்தவர்களுக்கு அப்பாயிண்டுமெண்ட் போடாமல், ஓராண்டு, இரண்டாண்டுகள் வேலே செய்தவர்களுக்கு, என்.எம்.ஆரில் வேலே செய்தவர்களுக்கு அப்பாயிண்டுமெண்ட் போடப்பட்டிருக்கிறது. இது குறித்து அங்குள்ள 10 ஆண்டுகளாக வேலே செய்யும் ஊழியர்கள் மிகவும் வேதனேக்குள்ளாகியிருக்கிறர்கள். இது குறித்து அரசு ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** அங்கத்தினர் அவர்கள் குறிப்பிடுகிற தகவல் எனக்குத் தெரியாது. ஆனல் தற்காலிகமாக இருப்பவர்களே நிரந்தரமாக்குவது பற்றி இது கேள்வி. இதுபற்றி அரசுப் பரிசிலித்துக்கொண்டிருக்கிறது என்று தெரிவித்தேன். வைகையைப் பொறுத்து தற்காலிகமாக இருப்பவர்களே நிரந்தரமாக்குவது பற்றிய செயற்குறிப்பு அனுப்பப்பட்டது. எல்லா அணேகளிலும் இதுபோல் தற்காலிகமாக இருப்பவர்களேப் பட்டியல் போட்டு அனுப்பினல், எல்லாவற்றையும் சேர்த்து ஒரேயடியாகப் பரிசீலித்து அவர்களே நிரந்தரமாக்குவது பற்றி அரசு முடிவெடுக்கலாம் என்று தலேமைப் பொறியாளருக்குக் குறிப்பு அனுப்பப்பட்டிருக்கிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** 10 ஆண்டுகள் வேலே செய்த ஆட்களே நிரந்தரமாக்காமல், இம்மாதிரி டெம்பரரியாக வைத்திருக்கும் முறை சரியான முறை தான ? இது மாதிரி நிலேமை பல அணேகளில் இருக்கிறது. ஒன்றிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து வேலே செய்தால், அவர்களே நிரந்தரமாக்குவதற்கு ஒரு நிரந்தரமான விதியை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** நிரந்தரமாக்குவதுபற்றித் தான் அரசு கருதிக்கொண்டிருக்கிறது. முழுமையாக ஒரு திட்டத்தைத் தயாரித்து அனுப்பவேண்டும் என்று தலேமைப் பொறியாளரைக் கேட்டுக்கொண்டிருக்கிறேம். அது வந்ததற்குப் பிறகு அரசு பரிசிலனே செய்து முடிவெடுக்கும்.

**திரு. த. சோனேயா :** வைகை அணேக்கட்டுத் தோட்டத்தில் வேலே செய்கின்ற தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படுவதற்கான ஒரு தேதியை அரசு அறிவிக்குமா ?

1973 டிசம்பர் 3]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தேதி அறிவிக்க முடியாது ஆனால், சீக்கிரம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜே. ஜேம்ஸ் :** இம்மாதிரியாக தற்காலிகமாக வேலை செய்யும் ஆட்கள் இருக்கும்பொழுது, நிரந்தரமாக வேலைக்கு ஆட்கள் தேவைப்படும்பொழுது, வெளியிலிருந்து ஆட்களை எடுக்கக்கூடாது, தற்காலிகமாக வேலை செய்பவர்களையே நிரந்தரமாக்கவேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** தற்காலிகமாக வேலை செய்பவர்களை நிரந்தரமாக்குவது பற்றித் தான் பரிசிலனையில் இருக்கிறது. நிரந்தரமாக்குவதற்கு வேறு வெளியிலிருப்பவர்களிடமிருந்து மனுக்களை வரவழைப்பது என்பது அல்ல

*New distillery at Mundiambakkam*

* 582 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any distillery has been started at Mundiambakkam near Villupuram in 1973; and

(b) if so, the details thereof ?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** (அ) & (இ) ஆம். இவ்வடிசாலை 1973 ஜூலையில் உற்பத்தி செய்யத் தொடங்கியது.

*Collection of arrears from tenants*

* 583 Q.—THIRU K. SUPPU : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether representations have been made to the Government requesting the postponement by one year of the repayment of land rent arrears by the tenants of flood affected areas; and

(b) if so, the action taken thereon?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : (a) It is presumed that by the term " land rent arrears by the tenants " the Hon'ble Member means the arrears of rent payable by the tenants to the landholders. If so, the answer to the question is ' Yes '.

(b) The Government have decided that there is no need for the extension of the time-limit allowed under the Tamil Nadu Cultivating Tenant Arrears of Rent (Relief) Act, 1972.